# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC.No 241/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Petitioner | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்செல்வன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 17.02.2026.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனது முதன்மை விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். கடந்த 22.10.2018 ம் தேதி பிராம்சரி நோட்டு எழுதி நான் தான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். பிராம்சரி நோட்டை செந்தில் குமார் எழுதி கொடுத்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை என்றால் ஆமாம். பிரமாண பத்திரம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து.

சாட்சி கையெழுத்து செய்த பிராம்சரி நோட்டில் எத்தனை பேர் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் நான் மற்றும செல்வராஜ் ஆகியோர். நீங்கள் எத்தனாவது சாட்சியாக கையெழுத்து போட்டீர்கள் என்றால் இரண்டாவதாக. உங்களுக்கு என்ன வேலை என்றால் விவசாயம். பிராம்சரி நோட்டு மற்றும் பத்திரம் எழுதுவதற்கு பத்திரம் எழுதுவதற்கு நீங்கள் லைசென்ஸ் வாங்கவில்லை என்றால் ஆமாம்.

2. வழக்கு போட்டுள்ள புகார்தாரர் ஆனந்தன் என்பவருக்காக எத்தனை பிராம்சரி நோட்டு எழுதியுள்ளீர்கள் என்றால் இந்த ஒரு பிராமிசரி நோட்டுதான். எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ஆனந்தன் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். புகார்தாரர் ஆனந்தன் முதலில் சாட்சியம் அளிக்கும் போது எதிரி பிராம்சரி நோட்டை எழுதிக் கொண்டு வந்திருந்தார் என சொல்லி இருந்தால் அந்த சங்கதி தவறை என்றால் ஆமாம்.

3. எந்த தேதியில் பிராம்சரி நோட்டை எழுதினீர்கள் என்றால் 22.10.2018 ம் தேதி. ஆனந்தன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திகடந்த 15.10.2018 ம் தேதி எழுதியதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் தவறுதான். பிராம்சரி நோட்டில் உள்ள விபரங்கள் யார் சொன்னார்கள் என்றால் நடைமுறையில் தெரியும் அதனால் நான் எழுதினேன்.

4. பிராம்சரி நோட்டை எழுதிய பின்னிட்டு தற்போது சாட்சியம் சொல்லும் வரையில் நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். எழுதி கொடுத்த பிராம்சரி நோட்டை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பது தெரியாது என்றால் அதில் எனது கையெழுத்தை இருக்கும். அதுதான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராம்சரி நோட்டு என்று உறுதியாக சொல்ல முடியாது என்றால் ஆமாம்.

5. உங்கள் முன்னிலையில் எவ்வித கடன் தொகையும் வாங்கப்படவில்லை என்றாலும் நீங்கள் எவ்வித பாம்சரி நோட்டும் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் காலை 9.00 – 10.00 மணி வரை . வழக்கு போட்டுள்ள ஆனந்தன் உங்களுக்கு தெரிந்த நபர் என்பதால் பிராம்சரி நோட்டை நேரில் பார்க்காமல் உங்களுக்கு தெரிந்தவர்

என்பதால் நீதிமன்றத்தில் பிரமாணம் பத்திரம் தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் தவறு.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.